**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 620/2024**

**Prosecution witness : ம.சா. 1** **Date : 25.11.2025.**

| | |
|---|---|
| **Name : ரியாஷ்கான்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

1) என் கை வசம் ரூ.5,00,000/– மற்றும் என் மாமனார் மற்றும் மகனிடம் பெற்ற தொகை அனைத்தும் எவ்வாறு வந்தது என்பது குறித்து ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். இந்த வழக்கின் எதிரி 2016 ம் ஆண்டு என் மனைவி பராமரித்து வரும் பைப் கம்பெனியிலிருந்து பைப் எடுத்து வந்தாரா என்றால் ஆமாம்.

2) அந்த காலகட்டத்தில் பழனிசாமிக்கு 2016 ம் ஆண்டு ஸ்கராப் எடுத்ததற்காக கடன் வசதி செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. ரொக்கத்திற்கு தான் வியாபாரம் செய்தேன். நான் சொல்வது தவறு என்றும் 2016 ம் வருடம் ஸ்கராப் எடுத்தார் மற்றும் பி.வி.சி பைப் எடுத்து விற்பனை செய்து வந்தார் என்றால் சரியல்ல.

3) 2016 ம் ஆண்டு என் மனைவி நிர்வகிக்கும் பி.வி.சி கம்பெனியில் மூலப்பொருள் மற்றும் கடன் பேரில் பைப் எடுத்ததற்கு இந்த வழக்கு காசோலையை ஆஜர் எதிரி பழனிசாமி என் வசம் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த காசோலைக்குண்டான தொகையை கொடுத்த பின்னிட்டும் காசோலையை திருப்பி தராமல் என் வசம் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல.

4) அந்த காசோலையை 2024 ம் வருடம் கைமாற்றாக கடனாக ரூ.30,00,000/– வாங்கியதாக துர்லாபம் அடைய வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்து ஆஜர் எதிரிக்கு ரூ.30,00,000/- கொடுப்பதற்கான வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. நான் என் மகன் மற்றும் மாமனார் வசம் இருந்து பணம் வாங்கி கொடுத்ததாக சொல்வது ஏற்கத்தக்கது அல்ல என்றும் ஆவண வடிவில் நிரூபணம் செய்யாத நிலையில் அது நம்பத்தகுந்த முறையில் இல்லை என்றால் சரியல்ல. 19.04.2024ம் தேதி எதிரி என்னிடம் கைமாற்று கடனை பெறவில்லை என்றும் கடன் பெற அவருக்கு அவசியமில்லை என்றால் சரியல்ல. 2016ம் ஆண்டு கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கை ஜோடித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.26 10:32:44 +0530

Judicial Magistrate No.II,
Mettur.